
# திராவிடநாடு

3-3-63 | வார வெளியீடு | விலை 16 காசு



# முகப்பில்.....

நள்ளிரவு நேரம்! ஊரெல்லாம் உறங்கிடும்பொழுது எங்கும் அமைதியின் ஆட்சி. ஆனால் ஒருத்திமட்டும் உறக்கமின்றித் தவிக்கின்றாள். விழிப்பு நிலையில் வேதனை உறுகின்றாள். என்ன காரணம்? உடல்நலக்குறைவோ? அல்லது மன உளைச்சலோ? இரண்டுமேதான். 'வருகின்றேன்' என்று சொல்லிச் சென்ற காதலனை சொன்ன கெடுநாள் அன்று வரவில்லை. மறுநாளும் காணோம்; பின்னைப் பலநாள் இதேபோல் வரவு நோக்கிக் காத்திருந்தது தான் பலன். அவன் வரவே இல்லை.

ஏமாற்றம் ஏக்கமாகியது; ஏக்கம் ஐயமாயிற்று; ஐயம் அச்சமாயிற்று. வருவான் என்ற நினைப்பு பொய்த்தது—ஏமாந்தாள்; வரவில்லையே என்று நினைந்தாள்—ஏங்கினாள்; வருவானோ? எனக்கவன்றாள் — ஐயுற்றாள்; ஏன் வரவில்லை என்று காரணத்தை ஆராயத் தலைப்பட்டாள் அச்சம் தோன்றியது.

காதலன் கடலில் கலம் செலுத்திச் சென்றுள்ளான். வரவில்லை. என்னஆயிற்றோ என்று எண்ணி எண்ணி காதலி நைந்தாள்; நலிந்தாள்.

பகலும் இரவுமாகக் காத்திருந்தாள். பகல் பொழுதில் துயரம் எப்படியோ ஆறிவிடுகிறது. வீட்டுச் சுழல் மனவேதனையைச் சற்று மறக்கச் செய்கிறது. இல்லையேல் அந்தத் தோழி இருக்கிறாளே, அவள் வந்து எதையாவது சொல்லி ஆறுதல்பெறச் செய்கின்றாள். ஆனால் இரவில் அப்படிஅல்ல. ஊரெல்லாம் உறங்கிடுகிறது. இவள் ஒருத்தி மட்டும் உளைகின்றாள். உறக்கம் அவளை அணுகவே இல்லை. தொழுவத்தில் கட்டியிருக்கும் மாட்டின் தலை ஆடுகிறது, மணி அசைகிறது—மணி ஓசை எழுகிறது. அதுவும் தெளிவாக அவள் காதில் வந்து விழுகின்றது.

இப்படிச் சற்று நேரம் கழிகிறது. தான் ஒருத்தி இப்படித் தவிக்கும்போது மற்றவர்கள் அனைவரும் கவலை இல்லாமல் தூங்குகின்றார்களே—இது என்ன அநியாயம் என்று நினைக்கிறாள். ஆ! ஓ! என்று கூவி எல்லோரையும் எழுப்பிவிடலாமா என்றுகூட நினைக்கிறாள். ஆனால் அப்படிச் செய்யவில்லை.

பின்னும் கொஞ்ச நேரம் கழிகிறது. கடலின் பேரிரைச்சல் அவள் காதுகளில் வந்து விழுகிறது. உற்றுக் கேட்கிறாள். கடலின் இரைச்சல் இவள் காதுகளில் அழுகை ஒலியாகக் கேட்கிறது. "ஐயோ பாவம்! கடல்கூட அழுது வருந்துகின்றதே" என்று பரிதாபப்படுகிறாள்.

"கடலே, பாதி இரவிலேகூட உன் குரல் கேட்கிறதே, நீ யாரால் வருத்தமுற்றாய்?" என்று கேட்கிறாள். வெறும் கேள்வியா அது! வேதனையின் உருவம். பாதி இரவில்கூட, என்பது தன் நிலையைச் சொல்கிறது. நீ யாரால் வருத்தமுற்றாய் என்று கேட்பதுதான் இன்னொன் காரணமாக வருந்துவதைக் குறிப்பிடுகிறது — நான்தான் வருந்துகிறேன் — கடலே, நீ கூடவா வருந்துகின்றாய்? என்று கேட்கின்றாள்.

குறுந்தொகை 163 ஆம் பாடல் இந்த அழகிய காட்சியைத் தருகிறது.

யார் அணங்(கு) உற்றனை, கடலே? [பூழியர்
சிறுதலை வெள்ளைத் தோடுபரந் தன்ன
மீனார் குருகின் கானலம் பெருந்துறை
வெள்வீத் தாழை திரையலை]
நள்ளென் கங்குலும் கேட்கு(ம்) நின்
குரலே!

கடலே, [பூழி நாட்டாரது, சிறிய தலையையுடைய வெள்ளாட்டின் கூட்டம் போன்ற, மீன் உண்ணும் கொக்குகளின் கூட்டம் நிறைந்துள்ள சோலை சூழ்ந்த துறையில், வெள்ளைப் பூவையுடைய தாழையை, அலைகள் தாக்கும்)

நடு இரவிலும் நின் ஆரவாரம் கேட்கிறது; நீ யாரால் வருந்த முற்றாய்?

★

# பொய்மையும் வாய்மையிடத்த...

முதல் சம்பளம் வாங்கியதும் ஒரு பேனா வாங்கிக்கொண்டு திருப்பித் தந்துவிடுவதாக வாங்கி வந்த பேனாவை நாளை கொடுத்துவிட வேண்டும். அதற்குள்ளாக, அந்தப் பேனாவைக் கொண்டே எழுதிவிட வேண்டும் என்று, அவசர அவசரமாக எழுத முனைந்தான் மாணிக்கம்.

மாணிக்கம் ஆசிரியர் வேலைக்கு வந்து நேற்றோடு ஒரு மாதம் ஆகிவிட்டது. காலையில்தான் சம்பளம் வாங்கினான். புதுப் பேனா வாங்க வேண்டிய அவசியமில்லாமலே, ஓசிப் பேனாவைத் திருப்பித் தர வேண்டியதாகிவிட்டது. அவன் எழுதிக்கொண்டிருப்பது விலகல் கடிதம்!

விலகல் கடிதத்தின் ஒவ்வொரு எழுத்தையும் உதிரவிடாமல் அவன் விரல்கள் தடுத்தன. இக்கடிதம் எழுதி முடிக்கப்பட்டால், அந்த விரல்களுக்கு இன்றோடு சுகவாசம் போய்விடும் என்பதால்தான் அவை போராடிப் போராடி எழுத்துக்களைத் தப்பவிட்டன. சாக்குக் கட்டி பிடித்து நாலு வரி எழுதியதோடு ஓய்வெடுத்த விரல்கள், நாளை முதல் மீண்டும் கண்ட கண்ட கூலி வேலைகளையெல்லாம் செய்ய வேண்டியிருக்கும். விரல்கள் மறுத்து என்ன செய்ய? மனம் தார்க்குச்சியால் குத்தித் தூண்டும்போது!

மாணிக்கத்தைக் குள்ளப்பன்பட்டிப் பஞ்சாயத்து யூனியன் பள்ளிக்குத் தலைமை ஆசிரியராக நியமித்து உத்தரவு கிடைத்த அன்று அந்தக் குப்பமே அல்லோலகல்லோலப்பட்டது.

“மாரி மகன் மாணிக்கத்துக்கு வாத்தியார் வேலை வந்திருக்காம்! நூறு ரூபாய் சம்பளமாம்! போகுது, அவன்பட்ட தொல்லைக்கு இப்போதாவது விடிவு ஏற்பட்டதே!”

“பச்சைத் தண்ணியைக் குடிச்சுக்கிட்டு மகனைப் படிக்க வைச்சபோது அவளைப் பைத்தியக்காரின்னு நினைச்சோம்! இனி உட்கார்ந்துக் கிட்டுத் தின்னுவா!”

இப்படியாக வாழ்த்துக்களும் விமரிசனங்களும் வீதியில் ஒலித்தன.

கூலிவேலைசெய்து வாயைக்கட்டி வயிற்றைக் கட்டி மாணிக்கத்தைப் பத்தாவது வகுப்பு வரை படிக்க வைத்துவிட்டாள் மாரி. ஆனால், அதற்குப் பிறகு அவள் பட்டபாடும், மன உளைச்சலும் அந்தக் குழப்பத்திலே யாரும் தங்கள் பிள்ளையைப் படிக்க வைப்பதில்லை என்ற முடிவெடுக்கும்படியாகச் செய்தது.

மாணிக்கமும் சிறு சிறு கூலி வேலையாகச் செய்து, ஒரு வருஷம்

**பெரு. இராமச்சந்திரன்**

காசு சேர்த்து, ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் சேர முயற்சித்தான். எறும்பு சேர்த்த அரிசி யானை வாய்க்குத் தீனி போடக் கட்டுமா? சிபாரிசுக்காரப் பெரிய மனிதருக்கு பஸ் சார்ஜுக்கு போதவில்லை.

எப்படியோ இடம் கிடைத்துப் படிப்பும் முடிந்துவிட்டது. பிறகு வேலை கிடைக்காமல் ஒரு வருஷம் அலைந்தபோது, பழைய வேலைதான் கைகொடுத்து உயிரைக் காத்தது.

இப்படியெல்லாம் கஷ்டப்பட்டுக், கிடைத்த வேலையை விட்டுவிட விலகல் கடிதம் எழுதும்போது, அவன் கைகள் ஓட மறுத்ததில் ஆச்சரியம் இல்லையே!

வேலையில் சேர்ந்த முதல் நாள் நிகழ்ச்சியை அவனுடைய பேனா நுனி கீறியது.

மாணிக்கம் வகுப்பிற்குள் நுழைந்தபோது ஒரே அமைதியாக இருந்தது. அது ஐந்தாம் வகுப்பு. மற்ற வகுப்பிலிருந்து மாணவர்கள் அவனை எட்டி எட்டிக் கடைக் கண்ணால் பார்த்து ‘புது ஹெட்மாஸ்டர்!’ என்று கிசுகிசுத்தது அவன் காதில் விழுந்தபோது, ஏதோ ஒரு புதுவகை இன்பமாக இருந்தது. வேலையில் சேர்ந்து ஒருமணிநேரம் ஆகும். இவ்வளவு நேரமும் சார்ஜ் ஒப்புக்கொள்வதில் செலவழித்துவிட்டு இப்போது தான் வகுப்பிற்குள் நுழைந்தான். சிறிய வகுப்புத்தான்.

“பதினாறுபேர்தானா?” தலையை எண்ணிவிட்டு மெல்லக் கேட்டான் மாணிக்கம்.

“மத்தியானச் சாப்பாட்டுக்கு அரிசி வாங்க இரண்டு பையன்கள் போயிருக்காங்க சார்!” ஒரு சிறுவனின் கீச்சுக்குரல் முடியவும், அந்த இரண்டு மாணவர்களும் வகுப்புக்குள் நுழையவும் சரியாக இருந்தது.

மாணிக்கத்திடம் பில்லை நீட்டியவாறு, “அரிசியைச் சமயலறைக்குக் கொண்டுசெல்லட்டுமா சார்?” என்றான் ஒருவன். பில்லைப் பார்த்தவாறு, “எப்போதும்போலச் செய்!” என்று கூறிய மாணிக்கம் வாசற்படியைத் தாண்டப்போன பையனைத் திரும்ப அழைத்தான். பில்லில் ஐந்துபடி அரிசி என்று எழுதியிருக்க, பையில் இருப்பது கொஞ்சமாகத் தெரிந்ததால்தான் திரும்ப அழைத்தான்.

“எத்தனை படி அரிசி?”

“மூன்று படி அரிசி, சார்!”

"பில்லில் ஐந்துபடி என்று போட்டிருக்கிறது?"

"அது சார்" வகுப்பிலிருந்த ஒரு முந்திரிக்கொட்டை எழுந்தவாறு "அப்படித்தான் சார்! எப்பவும் மூனுபடி வாங்கிக்கிட்டு அஞ்சு படின்னு சீட்டு 'வாங்கி வருவோம்!'' என்றுன்.

மாணிக்கத்துக்கு ஷாக் அடித்ததுபோல இருந்தது. பழைய தலைமை ஆசிரியரை அழைத்து வரப் பையனை அனுப்பிவிட்டு, வெளியே வந்துவிட்டான்.

ஹையர் கிரேடு ஆசிரியரைத் தலைமை ஆசிரியராகக்கொண்டு நான்கு ஆசிரியர்களோடு இருந்தது அந்தப் பள்ளிக்கூடம். ஐந்தாம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் கற்பிக்க வேண்டும் என்ற புதிய திட்டத்தினுல், ஒரு வருஷமாக வேலையில்லாமல் இருந்த மாணிக்கத்துக்கு, அந்தப் பள்ளியில் செகண்டரிகிரேடு தலைமை ஆசிரியராக நியமனமாகியிருந்தது.

பழைய தலைமை ஆசிரியர் வந்தார். பில்லைக்காட்டி விளக்கம் கேட்டான் மாணிக்கம்.

அவர் கூறினர்:

"ஒரு மாணவனுக்கு ஒரு நாளைக்குப் பத்துக் காசுக்குச் சோறுபோட வேண்டும். ஆறு காசு சர்க்கார் மான்யமாகக் கிடைக்கும். நான்கு காசு பொதுமக்களிடமிருந்து நன்கொடையாக வசூலிக்கப்படவேண்டும். இந்த ஊரைப் பார்த்தாலே உங்களுக்குப் புரியுமே! எல்லோரும் அன்றாடம் கூலிவேலைசெய்து உலைவைப்பவர்கள். நன்கொடை வசூலிக்க முடியாது. நன்கொடை வசூலிக்காவிட்டால் சர்க்கார் மான்யம் கிடைக்காது. ஆதலால், பள்ளியின் நலனை முன்னிட்டு நாலுகாசு நன்கொடை வசூலிப்பதாகக் கணக்குக் காட்டி, சர்க்கார் மான்யத்தில் மட்டும் சோறுபோடுகிறேன்."

"பொய்க்கணக்கா?" மாணிக்கம் அதிர்ச்சியோடும் பயத்தோடும் வெளியேவிட்டான் வார்த்தையை.

"ஆம், பொய்க்கணக்குத்தான்! ஆனுல், யாருக்கும் தீங்கு விளைவிக்காத பொய்க்கணக்கு. சொல்லப்போனல் நன்மை மட்டுமே விளைவிக்கும் பொய்க்கணக்கு. 'நன்மை பயக்கும் என்றல், பொய்மைகூட வாய்மையாகக்கொள்ளப்படும்' என்று வள்ளுவர் கூறியுள்ளது போல, நன்மை விளைவிக்கும் பொய்மை. இந்த நல்ல பொய்மையை நாம் செய்யாவிட்டால், இப்பள்ளியை மூடிவிட்டுப் போக வேண்டியிருக்கும்'' என்றர்.

விளக்கம் மாணிக்கத்துக்குச் சரியானதாகவேபட்டது. ஆனுலும், நாளைமுதல் நன்கொடை பெற ஏதாவது முயற்சிக்க வேண்டுமென்று எண்ணினன்.

மறுநாள் அவன் 'உள்ளவர்களில் பெரியவர்கள்' நான்கு பேரை அணுகி, விஷயத்தைச் சொன்னபோது "உள்ள காசைக்கொண்டு சோறுபோடு வாத்தியாரே!" என்ற அறிவுரைதான் நன்கொடையாகக் கிடைத்தது.

மாதம் ஒன்று மறைந்தது.

மதிய உணவுக் கணக்குகளைச் சரிபார்க்க டிப்டி இன்ஸ்பெக்டர் ஆபீசிலிருந்து உத்தரவு வந்தது. கணக்கைகொண்டுசென்றமாணிக்கத்துக்கு அங்கே வரவேற்புக்கீதம் பலமாய் இசைக்கப்பட்டது.

"வாய்யா! நீர்தான் குள்ளப்பன் பட்டித் தலைமை ஆசிரியரா! உம்மீது புகார் வந்திருக்கிறதய்யா, உண்மைதானு?" இசைத்தவர் இன்ஸ்பெக்டர்.

"நீர் மூன்று ரூபாய்க்குச் சாமான் வாங்கிக்கொண்டு ஐந்து ரூபாய்க்கு வவுச்சர் கேட்டு வாங்குவதாக, உமது பற்று வரவுக் கடைக்காரன் மகனே புகார் செய்திருக்கிருனய்யா! என்ன சொல்கின்றீர்?"

"யார் கடைக்காரன் மகனு?" இந்த வார்த்தைகள் மாணிக்கத்தின் உதட்டுக்குள்ளேயே ஒலித்து அடங்கின. இந்தப் புகாரின் காரணம் அவனுக்குப் பளிச்சென விளங்கியது.

✲

பள்ளி ஆசிரியை கமலாவை ஒரு மைனர்ச் சங்கிலி பின்தொடர்ந்து, வரும்போதும் போகும்போதும் பாராக் கொடுப்பதைச் சிலநாள் கண்டும் காணுதது போலிருந்தான் மாணிக்கம். ஒரு நாள் அந்த மைனர்ச் சங்கிலிப் பேர்வழி வேண்டுமென்றே கமலாமீது சைக்கிளை விட்டு மோதிக் கலாட்டா பண்ணிய போது, அவனை வசமாக அவமானப்படுத்தி அனுப்பினன். அதைப் பழைய ஆசிரியரிடம் கூறியபோது, "அவன் ஒரு தறுதலை சார்! அவன் வம்புக்குப் போகாதீர்கள். இடைஞ்சல் செய்வான். இந்த ஆசிரியையும் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று ஏதாவது பேசி வைத்தால், அவன் பின் தொடருவானு? நமக்கெதுக்கு அதெல்லாம்? தெரு விஷயம் தெருவோடேயே போகட்டும். பள்ளிக்கூடத்தில் அவன் கேளிக்கைக்கு இடம் கொடாமல் பார்த்துக் கொள்வோம்!" என்று அவர் கூறியதும் நினைவிற்கு வந்தது.

டிப்டி இன்ஸ்பெக்டரிடம் "ஆமாம் சார்!" என்று கூறிவிட்டு, நிலைமையையும் வழக்கத்தையும் எடுத்துக் கூறினன் மாணிக்கம். டிப்டி இன்ஸ்பெக்டர் உதட்டைக் கடித்தார். கையைக் காலையெல்லாம் ஆட்டிச் சைகை செய்து பார்த்தார், அவன் பேச்சில் பச்சையான உண்மை இருந்ததால், அதை நிறுத்த, பக்கத்தில் ஜில்லாக் கல்வி அதிகாரி!

முடிவு?

மாணிக்கம் கொடுத்த கணக்கு ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அதாவது, சர்க்கார் மான்யம் கிடைக்காது. அதோடு நடவடிக்கை வேறு!

சர்க்கார் மான்யத்தை நம்பிக் கடைக்காரரிடம் மதிய உணவுக்கு வாங்கிய கடன் நூறு ரூபாயையும் இன்று காலை வாங்கிய சம்பளத்தைக் கொடுத்து அடைத்தான்.

எண்ணக் கடலில் மூழ்கியிருந்த மாணிக்கம் அவ்வூருக்கு ஒரே தடவை வந்து திரும்பும் ஊர்தியின் ஒலி கேட்டு உலுக்கி எழுந்தான். விலகல் கடிதத்தை மடித்து உறையிட்டுவிட்டு, அதைத் தபாலில் சேர்ப்பதற்கும் ஊர்திக்குமாக பழைய ஆசிரியரிடம் ஒரு ரூபாய் வாங்கிக்கொண்டு, ஊர்தி நிலையத்தை நோக்கி நடந்தான்.

அவன் உதடுகள் எதையோ முணுமுணுத்துக்கொண்டு சென்றன. அந்த ஒலிக் குறியீடுகளையெல்லாம் ஒன்று சேர்த்துப் பார்த்தால், அநேகமாக இந்த வார்த்தைகளாய்த்தான் இருக்கும்:

''பொய்மையும் வாய்மை யிடத்த
புரைதீர்ந்த

நன்மை பயக்கு மெனின்''

என்று, வள்ளுவர் சொன்னது இன்றைய உலகத்துக்கு அல்ல!

# விழாப் பேச்சு!

லர் 21 ] ஆண்டு சந்தா ரூ. 8 (3—3—1963) தனிப்பிரதி 16-காசு [ இதழ் 27.

பீகார் கவர்னர் அனந்தசயனம் அவர்கள், அரியதோர் யோசனையை வழங்கியுள்ளார்கள்.

மேலிடம் சென்றவர்கள் இப்படி யோசனைகளை வழங்கி வருவது, கிட்டத்தட்ட மரபு ஆகிவிட்டது. பீகார் கவர்னர் அந்த மரபு கெடவிடவில்லை; யோசனை கூறியுள்ளார்.

திறப்பு விழாவுக்காக வந்திருந்தார்; நகராட்சி மன்றம் வரவேற்பு அளித்தது; பெற்றுக்கொண்ட அப்பெரியவர், தம்மை மகிழ்வித்தவர்களை மகிழ்விக்கும் முறையில், நகராட்சி மன்றம், பல்வேறு வசதிகளை மக்களுக்குச் சமைத்தளிக்க, வரிகளை மட்டுமே நம்பிக்கொண்டிராமல், வருவாய் பெருக்கிக்கொள்ளும் திட்டம் மேற்கொள்ளவேண்டும் என்று கூறினார். வருவாய் பெருக வழியும் காட்டினார்; நகராட்சியே நகருக்குள் 'மோட்டார் பஸ்' நடத்த முற்படலாம் என்பதாக.

சீரிய யோசனை! நல்ல வருவாய் கிடைக்கும் என்று எண்ணி மகிழ்ந்திருப்பர், செங்கற்பட்டு நகராட்சி மன்றத்தினர்.

சென்றேன்! சீரிய திட்டம் ஒன்று தந்தேன்!—என்று கூறிக் கவர்னரும், தமது கடமையைச் செவ்வனே செய்து முடித்ததை எண்ணி மகிழ்ந்திருக்கக்கூடும்.

நகர மக்களுக்குத் தேவையான பல வசதிகளைச் செய்துதர, வரிகளை மட்டுமே பெரிதும் நம்பிக்கொண்டிருக்கும் நிலையில், நகராட்சியினர், வரிகளை அதிகமாக்கிக்கொண்டு, போவதால் வாட்டமுற்றுள்ள மக்களும், இதோ இப்பெரியவர், சீரிய திட்டம் தந்திருக்கிறரே, ஏன் நகராட்சியினர், இதுபோன்ற திட்டம் தீட்டி, வருவாய் பெருக்கிக்கொள்ளக்கூடாது, வரி! வரி! என்று கொட்டியபடி உள்ளனரே என்று எண்ணிக்கொண்டும் இருப்பர்.

ஆனல், வருவாய் பெருக்கிக்கொள்ள, கவர்னர் கூறியதுபோன்ற திட்டங்களை மேற்கொள்ள நகராட்சிகள் முற்படும்போது, துரைத்தனம், இடந்தருவதில்லை, வரையறுக்கப்பட்ட அதிகாரம் மட்டுமே பெற்றுள்ள நகராட்சிகள், துரைத்தனம் அனுமதி வழங்காததைச் செய்திடவும் இயலாது.

சில நகராட்சிகள் இதுபோல, வருவாய் பெருக்கிக்கொள்ள வழி தேடியபோதெல்லாம், சர்க்கார் முகம் சுளித்துக்கொண்டது; அனுமதி தரவில்லை.

இதனை அறிந்திருந்தால், அனந்தசயனம் அவர்கள், வருவாய் பெருக்கிக்கொள்ளத் திட்டம் தந்ததுடன் தமது உரையை முடித்துக்கொண்டிருந்திருக்கமாட்டார்; நகராட்சிகள் வருவாய் பெருக்கிக்கொள்ள வழிதேடும்போது, ஊக்கமும் உற்சாகமும் அளித்து, உரிமை வழங்கிடச், சர்க்கார் முன் வரவேண்டும்; அதற்காகச் சட்டம் திருத்தப்படவேண்டுமானல் செய்திடவும் வேண்டும் என்றும் பேசியிருப்பார்.

இன்றுள்ள நிலைமை காரணமாகச், சீரிய யோசனைகள் பலவும், விழா நாள் பேச்சாக மட்டுமே அமைந்துவிடுகின்றன, செயல்படுத்தப்படுவதில்லை. எனவே, இத்தகைய சீரிய யோசனைகளை வழங்கும் பெரியவர்கள் நிலைமையை முழுவதும் அறிந்துகொண்டு, ஆட்சியினருக்கு அறிவுறுத்தினல், பேச்சிலே காணப்படும் சுவையுடன், பயனும் மிகுதியாக ஏற்படக்கூடும். அஃதன்றி, விழாவிலே, சுவைதரு பேச்சு மட்டும் வழங்கிவிட்டுச் செல்வரேல், யாது பயன்?

நகராட்சியினர், தக்கோர் தந்தருளிய யோசனையைக் கேட்டு நடக்கவும் இல்லையே என்று மக்கள் எண்ணி, நகராட்சியினர்மீது கோபம் கொள்ளமட்டுமே, பேச்சுப் பயன்படும்.

எனவே, விழாக்களின்போது நல்ல எண்ணங்களை, சீரிய ஏற்பாடுகளை வெளியிடும் பெரியவர்கள், நிலைமையையும் விளக்கி, நடைமுறைச் சிக்கல்கள் நீங்கவும் வழி கூறுவது, முறையாகும்.

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளத் தக்க குளிர் தருவேண்டும் எனக்கூறுவதிலேயும், கேட்பதிலேயும் சுவை இருக்கத்தான் செய்

யும். ஆனால், 'பாலை' நிலமாக இருப்பின், சுவை பேச்சளவுக்குத்தானே!!

நகராட்சிகளின் வருவாய் வளர, திட்டமிட, செயல்பட, அவைகளுக்குப் போதிய ஊக்கமும் உரிமையும் அளித்திட ஆட்சியினர் முன் வர வேண்டும்.

விழாக்களிலே கலந்து பெருமை தரும் பெம்மான்கள், இனி இந்த நோக்கம் ஈடேறத் தக்கவிதத்தில், ஆட்சியாளர்களுக்கு அறிவுரை அளித்திட வேண்டுகிறோம்.

# மூடி மறைத்திட வேண்டாம்

பொருளாதார வளர்ச்சியின் வேகம், போதாது.

முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களினால் ஏற்பட்ட நலன்கள், எல்லோருக்கும் கிடைத்ததாகத் தெரியவில்லை.

விவசாயம், சிறு கைத்தொழில் இவைபற்றி மேலும் அதிக கவனம் செலுத்தவேண்டும்.

கிராமப் பொருளாதார நிலைமைபற்றிய தகவல்களைச் சேகரிக்கவேண்டும், ஆராய்ந்து பார்க்கவேண்டும்; அப்போதுதான், தக்க முடிவுகள் எடுக்க இயலும்.

புள்ளிவிவரங்கள் செம்மையான முறையிலே அமைந்திடவேண்டும்.

நாட்டின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவேண்டுமானால், கிராமப்பகுதிகளை மேலும் அக்கறை செலுத்திக் கவனித்தாகவேண்டும்.

திட்டங்களில், பொது மக்கள் அதிக அளவில் பங்கேற்கும்படி உற்சாகமூட்டவேண்டும்.

இவை, எங்கோ வெளிநாட்டிலிருந்து இங்குவந்து பார்வையிட்ட பிரமுகரின் கருத்துரை அல்ல.

இவை, ஆளுங்கட்சியைக் குறைகூற, எதிர்க்கட்சியினர் எடுத்துக்காட்டிடும் கண்டன உரையும் அல்ல.

இவை, வெறும் ஏட்டுப் படிப்புப் போதும் என்று எண்ணிக்கொண்டு, நாட்டு நிலையை நேரடியாகக் கண்டறியாதவரின் வெற்றுரை அல்ல.

இவை, திட்டமிட்ட பொருளாதார முறையே கூடாது என்று கூறும் பத்தாம் பசலியின் பயனற்ற பேச்சு அல்ல.

இவைபோன்ற கருத்துகளைத் தருபவர், திட்டத்துக்கென்றே பொறுப்பேற்றுக்கொண்டிருக்கும் அமைச்சர் நந்தா ஆவார். இந்தத் திங்கள் பதினைந்தாம் நாள்.

உள்ளதை மறைத்திட, புனைந்துரை கூறிட, அமைச்சர் விரும்பாமல், குற்றம் குறைகளை எடுத்துக் காட்டியது வரவேற்கத்தக்கதாகும்.

குற்றம் குறைகளை அறிந்தால் மட்டுமே, செம்மையான முறைகளை மேற்கொள்ள முடியும், பயன் மிகுதியாகும்.

குற்றம் குறைகளை, மாற்றுக் கட்சியினர் எடுத்துக் காட்டும்போது, ஆட்சியினர் ஆயாசப்படுவது, ஜனநாயகப் பண்பு ஆகாது; அதுமட்டுமின்றித், திட்டங்களால் பெறவேண்டிய பயனைப்பெறும் வழியாகவும் அமையாது.

ஆனால், ஆளுங் கட்சியினரோ, எவர், குற்றம் குறையை எடுத்துக் காட்டினாலும், கோபம் கொந்தளிக்கும் நிலைபெறுகின்றனர்; கூறுபவர் குறைமதியினர் அல்லது கோணற் போக்கினர் என்று கூறிவிடுகின்றனர்.

இந்தப் போக்கு நல்லதுமல்ல, ஜனநாயக நாட்டுக்கு ஏற்றதுமல்ல.

இந்தப் பேருண்மையைக் கருத்தில்கொண்டே, திட்டத்தில் ஏற்பட்டுவிட்ட செயல்படுத்துவதில் முளைத்துவிட்ட கேடுபாடுகளை, சீர்குலைவுகளை, பிற கட்சிகள் எடுத்துக் காட்டுகின்றன.

அவைகள்மீது இதுவரை காய்ந்துவந்த ஆட்சியினர், ஏறத்தாழ அதேவிதமான கருத்துகளை திட்ட மந்திரி நந்தா அவர்கள் எடுத்துக்காட்டி இருப்பதைக் கவனித்துத் தெளிவுபெற வேண்டுகிறோம்.

பலன் போதுமானதாக இல்லை.

பலன் பரவலாகவில்லை.

பலன் பற்றிய தகவல்கள் சரியாக இல்லை.

புள்ளி விவரம் தக்கதாக அமையவில்லை.

மக்கள், திட்டத்தில் பங்கேற்க உற்சாகம் காட்டப்படவில்லை.

இவை மறந்துவிடத்தக்க, அல்லது அலட்சியப்படுத்தத் தக்க, குறைகள் அல்ல.

திட்டத்தின் அடிப்படையிலே வெடிப்புகள் ஏற்படச் செய்யக் கூடியவை.

எனவே, திட்ட மந்திரியே சுட்டிக் காட்டியதை, மனதிற்கொண்டு, துரைத்தனம் தக்கமுறையில் பணியாற்றவேண்டும் என்பதுபற்றி, ஆளுங்கட்சினர் வலியுறுத்தவேண்டும். மூடிமறைத்திடக் கூடாது, குறைகளைத் திருத்திக்கொள்ளத் தயக்கம் காட்டலாகாது.

# ஊரார் உரையாடல்

### ஒற்றன்

ஆகஸ்ட்:

இவ்வளவு பொறுமையுடன் இவர்கள் இருப்பார்கள் என்று நான் எண்ணவே இல்லை — பொறுமை மட்டுமல்ல, பொறுப்புணர்ச்சியுடன் இருக்கிறார்கள்......

செப்டம்பர்:

பொறுமை—பொறுப்புணர்ச்சி என்றெல்லாம், நீர் பேசுகிறீர். சிலர் இவர்களுடைய போக்கை, பயம் பிடித்தாட்டும் நிலை என்று கூறுகிறார்கள்—தெரியுமோ!

ஆகஸ்ட்:

தெரியுமய்யா, தெரியும். ஆனால், அப்படிப்பட்ட பேச்சு மூட்டிவிடக்கூடிய எரிச்சலைக்கூட அடக்கிக் கொண்டு, நிலை குலையாமல், நினைப்பு மாறாமல், நோக்கம் பாழ்படாமல் இருக்கிறார்களே, அதுதான் வியப்பாகவும் இருக்கிறது—எவ்வளவு பொறுப்புணர்ச்சியுடன் அவர்கள் இருக்கிறார்கள் என்பதையும் எடுத்துக் காட்டுகிறது.

செப்டம்பர்:

கன்னியா குமரியில் கூடிப் பிரிவினைப் பேச்சைத் தடைசெய்யச் சட்டம் கொண்டுவரவேண்டும், என்று சாஸ்திரி சொன்னாரே, அப்போதே எனக்கு என்னமோ போலிருந்தது. நல்ல நிலைமையை, வேண்டுமென்றே கெடுத்து விடுவார்கள் போலிருக்கிறதே என்று நினைத்தேன்......

ஆகஸ்ட்:

அதுபோலச் சில பத்திரிகைகள்கூட எழுதியிருந்தன, பார்த்திருப்பீரே. போருக்கான ஆதரவு திரட்டுவதிலே முனைந்திருக்கும்போது, ஏற்பட்டுள்ள நெருக்கடியைக் கவனித்துக், கிளர்ச்சிகளையும் பிரிவினைப் பிரசாரத்தையும் நிறுத்தி வைத்திருக்கும்போது, எதற்காக வலிய அவர்களைச் சண்டைக்கு இழுப்பதுபோல, ஒரு சட்டம் கொண்டுவருகிறார்கள்—தேவையில்லையே—யூகமான செயலாகவும் தெரியவில்லையே, என்றெல்லாம் சில பத்திரிகைகள் எழுதின.

செப்டம்பர்:

ஆமாம் — பார்த்தேன் — ஏதோ ஒரு பத்திரிகை, இந்தப் போக்கு, தி. மு. கழகத்தை முதுகிலே குத்துவது போன்றது என்று சூடாகவே எழுதிற்று — கழகப் பத்திரிகை அல்ல — பொதுவான போக்குள்ள பத்திரிகை.

ஆகஸ்ட்:

இப்படி எரிச்சலூட்டியபோதுகூட, எங்கள் போக்கிலே மாறுதல் இல்லை. சொன்னது சொன்னதுதான். கசப்புணர்ச்சி ஊட்டப்பட்டால்கூட, சமாதானச் சூழ்நிலை அமைகிற வரையில், கழகம் கிளர்ச்சி மேற்கொள்ளாது—மக்கள் கவனத்தைத் திருப்பத்தக்க நடவடிக்கையில் ஈடுபடாது — பிரிவினைப் பிரசாரம் செய்யாது என்றுதான் அறிக்கை கொடுத்தார்கள், கழகத் தலைவர்கள். பொறுப்புள்ள கட்சியின் போக்கு அப்படித்தான் அமையவேண்டும். நிலைமைகளைச் சீர்தூக்கிப் பார்க்கத் தவறக்கூடாது. எண்ணங்களை எடைபோடத் தெரியவேண்டும். எவனெவனோ மூட்டிவிடும் எரிச்சலாலே துள்ளிக் குதித்து நிலைமையைப் பாழாக்கக் கூடாது. சீனாக்காரனிடம் சண்டைக்கு நிற்கும்போது, பட்டாசு குரோசு என்ன விலைக்குத் தருவதாகத் திட்டம் என்று எவனாவது கேட்டுக்கொண்டு இருப்பானா — பைத்யக்காரன் தவிர. அதுபோல, ஆபத்தை நீக்கும் காரியத்தில் ஈடுபட்டிருக்கும்போது, நேரமும் நினைப்பும், அறிவும் ஆற்றலும் அந்தத் துறையிலே செலுத்தப்பட வேண்டுமேதவிர, தூண்டிவிடுபவன், தூபம் போடுபவன் போன்றவர்களின் பேச்சுக்கும் ஏச்சுக்கும் என்ன பதில் நடவடிக்கை எடுப்பது என்பதிலா செலவிடுவார்கள்?

செப்டம்பர்:

இது இவ்வளவு விளக்கமாகத் தெரிகிறபோது சிலதுகள் பேசுகின்றனவே, கழகம் கிலிகொண்டு விட்டது, பணிந்துவிட்டது, திராவிடநாடு திட்டத்தை விட்டுவிட்டது என்று... ஏன்...?

ஆகஸ்ட்:

இது தெரியவில்லையா உனக்கு. காங்கிரசைக் கடுமையாக எதிர்ப்பது, தி. மு. க. நல்ல வளர்ச்சி அதற்கு. அதனால் பொறாமை கொண்ட கட்சிகள், இந்தச் சண்டையின்போது, கழகம், பாதை தவறிச் சென்றால், பழிசுமத்தி ஒழிக்கலாம் என்று எண்ணுகின்றன. அதனால்தான், எப்படியாவது இந்தச் சமயத்

திலே கிளர்ச்சி செய்யும்படி ரோஷத்தை மூட்டிவிட்டால், தி. மு. கழகம், கேலியையும் கண்டனத்தையும் கண்டு வெகுண்டு, என் கொள்கையை விடமாட்டேன்! தடுத்தால், எதிர்ப்பேன்! என்று முழக்கம் எழுப்பும்; எழுப்பியதும், இன்னும்கொஞ்சம் தூண்டிவிட்டுப்,பேசத் தெரியும் கழகத்துக்கு! செயலாற்ற முடியுமா? அதற்குத் துணிவு உண்டா? என்று கேட்டால், கழகம், கிளர்ச்சி நடத்தும்......

**செப்டம்பர்:**

இவர்களுக்கு என்ன இலாபம், கழகம் கிளர்ச்சி நடத்தினுல்......

**ஆகஸ்ட்:**

என்ன இலாபமா! மிகப் பெரிய இலாபம் கிடைக்குமே! கிளர்ச்சி துவக்கும் வரையில், தூண்டியபடி இருந்துவிட்டுக், கிளர்ச்சி துவக்கப்பட்டதும், நாட்டு மக்களைப் பார்த்து, வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டுபேசுவார்களே; "ஐயயோ! இந்த அக்ரமத்தைப் பாருங்கள்—இந்த அநியாயத்தைக் கேளுங்கள். எதிரி உறுமுகிருன் எல்லையில்—எதிர்த்துப்போரிட்டு வீரமரணமடைகிருர்கள், நாட்டுப்பற்று மிக்கவர்கள், எல்லோரும், எல்லாவிதமான தியாகமும் செய்கிருர்கள். குழந்தைகள்கூடத் தின்பண்டத்துக்கு என்று இருந்த காசுகளை யுத்தநிதிக்குக் கொடுக்கின்றன. நாடே எழுச்சிபெற்று இருக்கிறது. என் வீடு! என் தொழில்! என் செல்வம்! என் கட்சி! என் கொள்கை! —என்ற பேச்சையெல்லாம் ஒத்திவைத்துவிட்டு, அனைவரும் ஒன்றுபட்டு நின்று சீனனை ஒழிக்கும் வேலையில் மும்முரமாக ஈடுபடுகிருர்கள். இப்படிப்பட்டச் சமயத்திலே, துளியும் நாட்டுப் பற்றுஅற்ற, நேர்மையற்ற, தி. மு. கழகம், என்னமோ தடைச்சட்டம் வந்ததாம்; அதை எதிர்க்கிரேம் என்று சாக்குக் கூறிக்கொண்டு, கிளர்ச்சியில் ஈடுபட்டு, நாட்டிலே குழப்பத்தை மூட்டுகிருர்கள். எவ்வளவு துரோகம்இது! நாட்டைக் காட்டிக் கொடுக்கும் காரியமல்லவா இது!—என்றெல்லாம் பேசிப், பொதுமக்களின் ஆத்திரத்தைக் கிளறிவிட்டு, தி. மு. கழகத்தின்மீது பழிசுமத்தலாம், பழிசுமத்தினுல் மக்கள், தி. மு. கழகத்தை வெறுப்பார்கள்; வெறுத்தால், மக்களின் அன்பையும் ஆதரவையும் தாங்கள் பெறலாம் என்று எண்ணித் திட்டமிடுகிருர்கள். இது தெரியவில்லையா?

**செப்டம்பர்:**

இந்தத் தடைச் சட்டத்தைமீறி ஜெயிலுக்குப் போனுல், கழகத்துக்குத்தானே நல்லதாகமுடியும் — கீர்த்தி—பெருமை, செல்வாக்கு, வளருமே.

**ஆகஸ்ட்:**

நம்முடைய காங்கிரஸ்காரர்கள், கழகத்துக்காரரை இந்த நெருக்கடியின்போது ஜெயிலுக்குப்போனுல், தடைச்சட்டத்தை மீறினுர்கள், ஜெயிலில்போட்டோம் என்று சட்டம் கூறுமே தவிர, பிரசாரம் என்ன நடக்கும் தெரியுமா? கழகம் சீனுக்காரனுக்கு நாட்டைக் காட்டிக் கொடுக்கத் திட்டமிட்டது—எல்லையிலே எதிரிப்படை வந்த நேரமாகப் பார்த்துக், கிளர்ச்சி நடத்திக் குழப்பம் உண்டாக்கினுல், எதிரிக்குக் கதவைத்திறந்துவிடுவது என்றுதானே பொருள்! அதைச் செய்யத் துணிந்தது, தி. மு. க. தடைச்சட்டம் போட்டார்கள் — போட்டால் என்ன—கொள்கை காத்திட, கிளர்ச்சி நடத்த, தடைச் சட்டம் மீறவேண்டும் என்று திட்டம் இருந்தால்கூடப், பகைவன் முறியடிக்கப்பட்டுப், போரிலே நமக்கு வெற்றி கிடைத்து, கௌரவமான சமாதானம் ஏற்படுகிறவரையில், பல்லைக்கடித்துக்கொண்டு பொறுத்துக்கொள்ளக் கூடாதா; தடைச்சட்டம் என்ன, உடனே எதிர்த்தால் தான் உடைபடுமா—உடைத்திட இந்தச் சமயம் தவறினுல் வேறுசமயமே வாய்க்காதா! இது தடைச் சட்டத்தை எதிர்த்து நடத்தப்படும் கிளர்ச்சி அல்ல—நாட்டை எதிரிக்குக் காட்டிக்கொடுக்கும் துரோகம்!!—என்று இப்படி அல்லவா, பொதுமக்கள் மனதிலே கலகம் மூட்டிவிடும் பிரசாரம் செய்யப்படும். பிறகு, எந்தக் காலத்திலும் கழகம் தலைஎடுக்க முடியாதே! காலத்துக்கும் அல்லவா, ஒட்டிக்கொண்டு இருக்கும் பழிச்சொல் ..............

**செப்டம்பர்:**

அது உண்மைதான் — பிரசாரம் அப்படித்தான் நடக்கும்.

**ஆகஸ்ட்:**

வெள்ளைக்காரனுக்கு நாட்டைக் காட்டிக் கொடுத்தார்கள் என்று பிரசாரம் செய்து, வெகு காலம், கழகம் தலைஎடுக்கவிடாமல் செய்தோம். பொதுமக்கள் தெளிவுபெற்று, உண்மையை உணர்ந்து கொண்டதால், இப்போது அந்தப் பிரசாரம் பலிப்பதில்லை. இப்போது ஆத்திரப்பட்டு தி. மு. கழகம், தடைச் சட்டத்தை மீறுவதாக எண்ணிக்கொண்டு, கிளர்ச்சி நடத்தினுல், சீனுக்காரனுக்கு உடந்தையாகிவிட்ட துரோகிகள் என்று புதிய பழி சுமத்தலாமே—இந்தப் பழியைத் துடைத்துக்கொள்ள எத்தனையோ ஆண்டுகள் ஆகும். அதுவரையில், கழகம் வலிவு இழந்துதானே இருக்கும். இலாபமில்லையா காங்கிரசுக்கு?

**செப்டம்பர்:**

இதை நான் எண்ணிப் பார்க்கவேயில்லை. உள்ளபடி காங்கிரசுக்கு இது நல்ல இலாபம் கொடுக்கும்.

**ஆகஸ்ட்:**

இதை எண்ணிப் பார்க்கும் எந்த அறிவாளியும், சீனுக்காரனுல் ஏற்பட்டுள்ள ஆபத்து நீக்கப்படுகிற வரையில், கிளர்ச்சியில் ஈடுபட மாட்டானே......

**செப்டம்பர்:**

ஆமாம்! சொறி சிரங்கு நீங்குகிற வரையில், சொகுசு தேடி அலைவார்களா, யாராவது—காரமருந்

திட்டு, முதலில், சொரி சிரங்கைத்தான் போக்கிக் கொள்வார்கள்.

ஆகஸ்ட்:

அதுபோலத்தான், பெரிய விவகாரத்திலும். இப்போது நாட்டுக்கு ஆபத்து இருக்கிறது; அது நீக்கப்பட அனைவரும் ஒன்றுபட்டு நிற்கவேண்டும்; அனைவரும் ஒன்றுபட்டு நிற்கவேண்டுமானால், மனமாச்சரியம் எழக்கூடாது; யாராவது வேண்டுமென்றே மனமாச்சரியம் மூட்டிவிட்டாலும், அறிவுத் தெளிவு உள்ளவன், பொறுத்துக்கொள்வான், பொங்கி எழமாட்டான். பால் தானாகப் பொங்கி வழிவது இல்லை, கள் போல; தெரியுமே.........

செப்டம்பர்:

சிலதுகள் பேசுகின்றனவே, கழகத்துக்கு வீரம் இல்லை என்று.

ஆகஸ்ட்:

பேசுகின்றவர்களின் வீரதீர பராக்கிரமம் நமக்குத் தெரியாதா என்ன?

செப்டம்பர்:

ஒரு சமயம், கழகத்துக்கு ஒரு பாடம் கற்பிக்கலாம் என்பதற்காகவே, அவர்கள், தடைச் சட்டத்தை மீறுவார்களோ? நடக்குமா அப்படி?

ஆகஸ்ட்:

அந்தப் பயமே வேண்டாம். அவர்களாவது, மீறுவதாவது! மீறிச் சிறை சென்றால் அவர்களுக்கு இருக்கும் வேலை என்ன ஆவது?

செப்டம்பர்:

என்ன வேலை இருக்கிறது அவர்களுக்கு......?

ஆகஸ்ட்:

அட, அது தெரியாதா? தி. மு. கழகத்தைத் தூற்றுவதுதானே அவர்கள் மேற்கொண்டுவிட்ட வேலை. நீயும் பார்க்கிறாயே, ஒவ்வொரு நாளும், கழகம் என்ன செய்யப் போகிறது? அண்ணாத்துரை என்ன செய்யப் போகிறான்? என்று கிளறி எடுத்து முகர்ந்து பார்த்தபடியும், முகம் சுளித்தபடியும் இருக்கிறார்களே தவிர, நாங்கள் இன்னது செய்யப் போகிறோம் என்று கூறுகிறார்களா—செய்கிறார்களா.........

செப்டம்பர்:

அது உண்மைதான். சதா சர்வகாலமும், கழகத்தைப்பற்றி எதையாவது எடுத்துப் போட்டுக்கொண்டுமென்றபடி இருக்கிறார்கள் — அது சொத்தை, இது சோடை என்று பேசுகிறார்கள்—சொந்தச்சரக்கு எதுவும் காட்டுவது காணோம்.

ஆகஸ்ட்:

இல்லை, காட்ட! வேலையே வயற்றெரிச்சலைக்கொட்டிக் காட்டிக்கொள்வதுதான், சத்தம் பலமாகத்தான் இருக்கும். சங்கீதக் கச்சேரியில் தாளம்போடுவதையும் பார், இழவு வீட்டிலே மாரடித்துக்கொண்டு அழுவதையும் பார்!! சத்தம் எப்படிக் காதைப்பிய்த்துக்கொண்டு வருகிறது, மாரடித்து அழுகிறபோது!

செப்டம்பர்:

அது வேடிக்கைதான்; பார்த்திருக்கிறேன். அது கிடக்கட்டும் தி. மு. கழகம் வீரம் இழந்துவிட்டது, போராடும் ஆற்றல் இல்லை, கிளர்ச்சி நடத்தப்போவதில்லை, என்றெல்லாம் சிலர் பேசுகிறார்களே......

ஆகஸ்ட்:

அதைக் கேட்டுக்கொண்டு, தி. மு. க. இளைஞர்கள் கழகத்தைவிட்டு மளமளவென்று கிளம்பித், தம்மிடம் வந்து சேர்ந்துவிடுவார்கள் என்பது பேசுபவர்களின் நினைப்பு என்கிறாயா?

செப்டம்பர்:

அப்படி ஒரு நினைப்பு இல்லாமல், ஏன் இப்படிப் பேசுகிறார்கள்?

ஆகஸ்ட்:

நினைப்பு இருக்கட்டும்—இவர்கள் பேச்சைக்கேட்டு நம்பி, கழகத்தைத் துறந்து, இவர்களிடம் வந்து சேரத் தக்கவிதமாக இவர்கள் இதுவரை நடத்திக்காட்டிய மாபெரும் வீரப் போராட்டங்களும், வெற்றிமாலைகளும், ஏற்ற கஷ்டநஷ்டங்களும் என்னவோ!! அதைக் கவனித்துப் பார்க்கமாட்டார்களா? மக்கள் என்ன மதிவாணர்கள் அல்லவா? கழகத் தோழர்கள் என்ன கருத்து அற்றவர்களா? அல்லது கழகத்தைக் கேலி பேசும் குணவான்கள் என்ன, போர்த்திட்டம் வகுத்து வைத்துக்கொண்டு, கவாத்து எடுத்துக்கொண்டிருக்கும் வீரர்களா......!! அங்கே ஏண்டி மகளே! ஆலாப் பறக்கறே, இங்கேவந்து சேருடி, ஈ ஓட்டிகிட்டு இருக்கலாம்!—என்றாளாம் ஒரு குறும்புக்காரி. அதைப்போல, இவர்கள், கழகம் திராவிடநாடு திட்டத்தை விட்டுவிட்டது—ஆகவே அங்கே ஏன் இருக்கிறீர்கள் இங்கே வருக! என்று அழைக்கும்போது, என்ன சொல்கிறார்கள்? இங்கு நீங்கள் விரும்பும் திராவிடநாடு இருக்கிறது, வருக! என்றா? அதுதான் இல்லை! அங்கே திராவிடநாடு விட்டுவிட்டார்கள்—இங்கு திராவிடநாடு இல்லை—என்ற முறையில் அல்லவா பேசுகிறார்கள். அவன் கிடக்கிறான் எச்சில் கையாலேகூட காக்காய் ஓட்டமாட்டான், கஞ்சப்பய! இங்கேவா, ஏகாதசி விரதம் இருக்கலாம் என்று எவனாவது கூப்பிட்டால், எப்படி இருக்கும். அப்படி அல்லவா இருக்கிறது, கழகத்தைக் கேலிசெய்து பேசுகிறவர்களுடைய பேச்சு.

செப்டம்பர்:

எப்படிப் பேசணும்னு சொல்றே அவர்கள்...... சொல்லேன்......

ஆகஸ்ட்:

கழகம் போராட்டம் நடத்தாது—நான் நடத்தப் போறேன்—வாங்க — என்று கூப்பிடட்டும். அதைக்

காணுேமே, எங்கே உங்கள் போராட்டம்? என்று சங்கு தூக்கிக்கொண்டு திரிந்து வந்தால் போதுமா?

செப்டம்பர்:

முதலிலே, கழகத்திலே இருக்கிறவங்களை வெளியெ கொண்டுவரவேணுமா—? அதுக்காத்தான் கழகத்தைத் தாக்கிப்பேசறது—

ஆகஸ்ட்:

கழகத்தைத் தாக்கிப் பேசக்கூடத் தேவை இல்லையே. போராட்டம் நடத்தக் கழகம் பயப்படுது—அப்படித்தானே பேசருங்க—சரி, உடனே வீரதீரமாக் கிளம்பி; தடைச்சட்டத்தை இந்த மாதம் இந்தத் தேதி நாங்க மீறப்போகிறோம், எல்லோரும் வருக! என்று ஒரு அழைப்புக் கொடுக்கவேண்டியதுதானே—மளமளன்னு வந்து சேருகிருங்க......

செப்டம்பர்:

நீ, வேணுமென்றே அவர்களைக் கேலிசெய்யறே.

ஆகஸ்ட்:

செ! சே! அதெல்லாம் இல்லேப்பா. போர் நடத்தப் பயம் கழகத்துக்குன்னு பேசறது, உண்மையா இருந்தா, கழகத்துக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டுமானு, உடனே இவங்க போர் துவக்கிடணும். அதுதான், மீசையுள்ள ஆண்பிள்ளைகளுக்கு அழகு. அதை விட்டுவிட்டு, அவன் கிடக்கிருன் மாலைக்கண்ணன்! வந்து பாரு என் நொள்ளைக் கண்ணே என்ரு, யாரு, வருவாங்க; சொல்லு......இதுகளுக்கு உள்ள நோக்கமெல்லாம், எதையாவது பேசி, என்னவாவது செய்து, தி. மு. கழகத்தை ஒழிக்கவேண்டும் என்பது தானே......நாட்டு மக்களுக்கு இது தெரியாதா......?

செப்டம்பர்:

நீ பேசுவதைப் பார்த்தா, தி. மு. கழகம் இருக்க வேணும், அழியக்கூடாது என்று எண்ணுவதுபோலல்லவா தோணுது—

ஆகஸ்ட்:

காங்கிரஸ்காரனு இருந்துகொண்டு, கழகம் சாகக் கூடாது, என்று நினைக்கலாமா என்றுதானே யோசிக்கறே, மனதைத் திறந்து சொல்றேன், தி. மு. கழகம் இருந்து வேலை செய்து வரவேண்டும் என்பதுதான் என் ஆசை—

செப்டம்பர்:

ஒரு காங்கிரஸ்காரன் பேசற பேச்சா இது......

ஆகஸ்ட்:

காங்கிரசிலே இருக்கிற ஒரு உண்மையான தமிழன் பேசற பேச்சப்பா இது. இந்த, தி மு. கழகம் இவ்வளவு நல்ல வலிவோட வேலை செய்து, தமிழ் நாட்டுக்காக வாதாடவும் போராடவும், உரிமை கேட்கவும் சளைக்காமல் இருக்கிறதாலேதான், தமிழ் நாட்டுக் காங்கிரசுக்கு இந்த அளவாவது மதிப்பும் செல்வாக்கும், டில்லியிலே கிடைக்குது. தி. மு. கழகம், வடக்கு வளருது, தெற்குத் தேயுதுன்னு பேசப் பேச, நம்ம தமிழ் நாட்டுக் காங்கிரஸ் மந்திரிகள், மத்திய சர்க்காரிடம் போய், இதை எடுத்துக்காட்டி, தி. மு. கழகம் இப்படிப் பேசுவதாலே, மக்கள் மனம் கொதிப்படைந்து இருக்குது, நீங்கள் அதை நீக்கியாகணும், இல்லையாளுல், நாடு பிரிந்து போய்விடும், என்று சொல்லித், திட்டத்திலே நல்ல பங்கு, நிதியிலே நல்ல பங்கு, கேட்டு வாங்கி வந்து, நம்ம நாட்டுக்கு வளர்ச்சி தேட முடியுது. வில் இருந்தாத்தாம்பா, அம்பு தொடுக்க முடியும்—வில்லை ஒடித்துவிட்டா, அம்பு எப்படிப் பாய்ந்து போகும்—கையாலே எடுத்து வீசிஞ, பாயுமா? ஆருதான் கீழே சாயுமா?

செப்டம்பர்:

அட, நீ, அந்த முறைவழியாப் போறயா......

ஆகஸ்ட்:

நான் போற வழி அல்லப்பா, இது; நம்ம காங்கிரஸ் மந்திரிகளே போகிற வழி இதுதான்—தி. மு. கழகத்தைக் காட்டி, மத்திய சர்க்காரைத் தங்கள் வழிக்குக் கொண்டு வருவது. அதுதான் இப்ப நடக்குது. தி. மு. க. இல்லையானல், இது இல்லே.

செப்டம்பர்:

தி. மு. கழகம் இருக்கிறது மறைமுகமா, தமிழ் நாட்டுக் காங்கிரசுக்கு, வடக்கே மதிப்பும், செல்வாக்கும் தேடிக் கொடுக்கத்தானு?

ஆகஸ்ட்:

நோக்கம்—திட்டம் அதுபோல இல்லே — ஆனல் விளைவு அதுதான். கூர்ந்து பார்த்தாத்தான் தெரியும். தி. மு. க. வளர வளர, தமிழ் நாட்டுக்குத் தொழில் வளம், கல்விவளம், இவைகளுக்குத் தேவையான நிதி வளம், தாராளமாகச் கிடைக்குது டில்லி சர்க்காரிடமிருந்து. அதைக்கூட விட்டுவிடு, இதைப் பாரு, யோசிச்சு. சுயராஜ்யம் ஏற்பட்ட இந்தப் 15 வருஷத்திலே, இப்ப, தமிழ் நாட்டாருக்குத் தரப்பட்டிருக்கிற அளவுக்கு மந்திரி வேலே, எப்பவாவது தரப்பட்டிருக்கா? இப்ப, எவ்வளவு?

டி. டி. கே.
சி. சுப்ரமணியம்
அழகேசன்
பட்டாபிராமன்
S. V. இராமசாமி
மரகதம் சந்திரசேகரன்

எப்படி, பட்டியல்! எப்படி, இப்படிப்பட்ட பட்டியல் கிடைச்சுது. தி. மு. கழகம் சொல்லி வருதே, தெற்குத் தேயுது, வடக்கு வாழுது என்று, அதை எப்படிச் சமாளிக்கிறது? இப்படித்தான்!

செப்டம்பர்:

தி. மு. கழக வலிவைப் பார்த்து இது தரப்பட வில்லை, சென்னையிலே உள்ளவர்களின் திறமையைப் பார்த்துத் தரப்பட்டது என்று......

ஆகஸ்ட்:

பேசுவாங்க... வேறே எப்படி அவங்க பேசமுடியும்! நாம் அல்லவா யோசிக்கவேணும்? சென்னையிலே என்ன, திடீரெனத் திறமை பொங்கி வழிய ஆரம்பிச்சு இருக்குதா! முன்னாலே இருந்தவர்களெல்லாம், விவரம் தெரியாதவர்களா-திறமையில்லாதவர்களா! அப்போது ஏன் இவ்வளவு பேர்களுக்கு இடம் கிடைக்கவில்லை.

செப்டம்பர்:

ஒருவிதத்திலே, நீ சொல்வது உண்மைதான். திட்டத்திலேகூடத், தமிழ் நாட்டுக்கு நல்ல பங்கு கிடைக்கறதுக்குக் காரணம், தி. மு. கழகம் தன்னுடைய வலிவாலும் வளர்ச்சியாலும், மத்திய சர்க்காரை மருளச் செய்திருக்குதே, அதுதான் என்று பெரிய இடத்திலேயே பேசக் கேட்டிருக்கிறேன்.

ஆகஸ்ட்:

தி. மு. கழகம் வளர்ந்த பிறகுதான், தமிழ்நாட்டு மந்திரிகளுக்கும் காங்கிரஸ் தலைவர்களுக்கும், புதிய மதிப்பு, நல்ல செல்வாக்கு, டில்லி சர்க்காரிலேயும், அகில இந்தியக் காங்கிரசிலேயும். பெரியாருடைய சுயமரியாதைப் பிரசாரம் வலுத்ததாலேதான், அறுபது வயது முதலியாரைக்கூட பதினாறு வயதுப் பிராமண வாலிபன், வாடா! போடா! என்று கூப்பிடுவது தொலைந்தது; வாங்க முதலியார்வாள்! கொடுங்க செட்டியார்வாள்! நாயுடுகார் என்ன சொல்றார்! படையாச்சி சௌக்கியமா இருக்காரா! — என்ற மரியாதை பிறந்தது; தெரியுமல்லவா.

செப்டம்பர்:

ஆமாமாம்! தமிழ் நாட்டுக்கு ஒரு புதிய நிலை ஏற்பட்டது உண்மைதான்.

ஆகஸ்ட்:

இந்தப் புதிய நிலையைக் காட்டிக் காட்டிப் பேசியாவது, தி. மு. கழகத்தை அடக்க முடியுமா என்று பார்க்கிறார்கள். தி. மு. கழகம் அழிந்தால், மாநிலத்துக்கு உரிமை, தொழில் வளர்ச்சி, திட்டத்தில் நல்ல பங்கு, நிதியில் நல்ல அளவு, தலைவர்களுக்கு நல்ல மதிப்பு, இவை ஒன்றுகூட, இப்போது உள்ளதுபோல இருக்கப்போவதில்லை.

செப்டம்பர்:

உண்மைதான்! ஆனால் உரக்கப் பேசாதே. அதோ, பார். கழகத்துக்காரன்—அவன் காதில் விழப்போகுது'

(கழகத்தான் வருகிறான் வணக்கம் கூறியபடி)

ஆகஸ்ட்:

வாப்பா! கழகம்! ஏது வணக்கம் கூறியபடி இருக்கிறே. தடைச் சட்டம் போட்ட காங்கிரஸ் என்று கடுங்கோபத்துடன், இருக்கக்கூடும் என்றல்லவா எண்ணிக்கொண்டிருந்தோம்.

செப்டம்பர்:

சண்டை போடத்தான் வந்திருக்கிறாய் என்றே எண்ணிக்கொண்டோம்.

ஜூலை:

அவசரப்பட்டு முடிவு செய்வதே, உங்கள் வழக்கம், நான் எப்படி அதை மாற்றமுடியும். தடைச் சட்டம் போட்டதாலே எனக்கு உங்கள் பேரிலே கோபமும் இல்லை, எரிச்சலும் இல்லை. சொல்லப்போனால், உங்களிடம் ஒருவிதமான பரிதாப உணர்ச்சிகூட எனக்கு ஏற்படுகிறது......

ஆகஸ்ட்:

அதென்னப்பா, எங்களிடம் பரிதாப உணர்ச்சி. தடைமீறி ஜெயிலுக்குப் போய் கஷ்டப்படவேண்டிய நிலை, கழகத்தாருக்கு, எங்களுக்கு என்ன? எங்களிடம் ஏன் பரிதாபம் பிறக்கவேண்டி வருகிறது! வேடிக்கையாக இருக்கிறதே......

ஜூலை:

ஐயயோ! பாம்பு! அடுத்த வீட்டு ஆண் பிள்ளையைக் கூப்பிடு என்று உங்கள் மனைவி உங்களிடம் சொன்னால், உங்களுக்கு எப்படி இருக்கும்......?

ஆகஸ்ட்:

அடுத்த வீட்டு...... என்ன என்ன...?

ஜூலை:

ஐயா! கோபம் கொள்ளாமல் கேளும். விஷயத்தை விளக்க, கதைபோலச் சொல்கிறேன். உடனே வீராப்புக்காக, நீ பாம்பு ஆனால் நான் கருடன் ஆவேன், நீ முடிமன்னனானால் நான் குடிமகன் ஆவேன், நீ பேன் ஆனால் நான் சீப்பு ஆவேன் என்றெல்லாம் காமன் பண்டிகை போக்கிலே பேசிக், காலத்தை வீணாக்க வேண்டாம். உங்கள் வீட்டிலே, சமயற் கட்டிலே ஒரு

## வாளா இருத்தல் கூடாது

கொழும்பு மாநாட்டு முடிவுகளை இந்திய சர்க்கார் ஏற்றுக்கொள்வதாகக் கூறிய பின்னரும், சீனர் வழிக்கு வரவில்லையென்றால், அவர்கள் இந்திய பூபாகத்தை எந்த நேரத்திலும் தாக்குவார்கள் என்பதை நாம் தெரிந்துகொண்டு, நம்முடைய இன்றைய சீன ஆக்கிரமிப்பை எதிர்த்து முறியடிக்கும் முயற்சிகளையும், முறைகளையும் மேலும் பெருக்கிக்கொண்டு விழிப்பாக இருத்தல் வேண்டும்.

பாம்பு, நெளிகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் கூடத்தில், சாய்வு நாற்காலியில். அலறி அடித்துக்கொண்டு உங்கள் மனைவி ஓடோடி வந்து, ஐயயோ! பாம்பு! அடுத்த வீட்டு ஆண் பிள்ளையைக் கூப்பிடுங்கள் என்று உங்களிடம் சொன்னால், எப்படி இருக்கும், உங்களுக்கு.

செப்டம்பர்:

அதாவது, பாம்பை அடிக்க, என்னால் முடியாது என்று என் மனைவி நினைக்கிறாள் என்று பொருள்......

ஆகஸ்ட்:

அதுமட்டும் அல்ல ஐயனே! உம்மை ஒரு ஆண் பிள்ளை என்று உம்முடைய மனைவியே மதிக்கவில்லை என்பது பொருள். நம்மை, இந்த கழகத்தான் அவ்வளவு கேவலமாகக் கருதிக்கொண்டு இருக்கிறான்.

ஜூலை:

பார்த்தீர்களா, பார்த்தீர்களா! பதறக்கூடாது என்று முன்னுரை போட்டுவிட்டுத்தானே கதையை ஆரம்பித்தேன். ஐயா! உங்க வீட்டிலே பாம்பு இல்லை, உங்கள் மனைவி உம்மை ஆண்பிள்ளை என்று மதிக்கத் தவறவில்லை...உம்முடைய வீரதீரத்தை உமது மனைவி மதிக்காமல் இருப்பார்களா! உம்மைக் கேவலப்படுத்த இதைச் சொல்லவில்லை—ஒரு விஷயத்தை விளக்க. ஒரே ஒரு ஊரில். ஒரே ஒரு வீட்டில் என்று வேண்டுமானால், கதையைத் திருத்திக்கொள்ளுங்கள்.

ஆகஸ்ட்:

அப்படிச் சொல்லு—அதாவது ஒரே ஒரு ஊரில், ஒரே ஒரு வீட்டில், ஒரு பாம்பு நுழைய, அந்த வீட்டுக்காரரைப் பார்த்து......

ஜூலை:

பக்கத்து வீட்டு ஆண்பிள்ளையைக் கூப்பிடு என்று மனைவி சொன்னால், என்ன பொருள்......

ஆகஸ்ட்:

கேவலப்படுத்துகிறாள், சந்தேகம் என்ன?

ஜூலை:

அதுபோல, நீங்கள் ஆற்றலோடு அறிவோடு, அரசியல் அந்தஸ்த்தோடு பிரச்சார யந்திரத்தோடு. இருக்கும்போது, பாம்பை அடிக்க பக்கத்துவீட்டு ஆண் பிள்ளையைக் கூப்பிடும் கதைபோல, எங்கள் தி. மு. கழகத்தை அழிக்க, டில்லி சர்க்காரின் தடைச்சட்டத்தைக் கூப்பிடுகிறீர்களே, இது கேவலம் இல்லையா, இதுகண்டு பரிதாபம் பிறக்காதா, என்போன்றவர்களுக்கு......

ஆகஸ்ட்:

இது போக்கிரித்தனமான பேச்சு......ஆமாம்...... நமக்கு இவனிடம் என்ன பேச்சு வாரும் போகலாம்...

ஜூலை:

விளக்கம் சொல்ல ஆரம்பித்தேன், விரட்டவில்லையே உம்மை.........

ஆகஸ்ட்:

நீ என்ன விரட்டுவது......நாங்களே போகிறோம்.

செப்டம்பர்:

எத்தனையோ வேலை இருக்கிறது — வீண் பேச்சு எதற்கு?

ஜூலை:

நானா ஆரம்பித்தேன் அந்தப் பேச்சை. நீங்களாகத்தான் தடைச் சட்டம் வந்திருக்கிறதே, கோபமா, மனஸ்தாபமா என்றெல்லாம் பேச்சைத் துவக்கினீர்கள். நான் அதைப்பற்றி, கவனிக்கவே இல்லையே.....

ஆகஸ்ட்:

கவலைப்படக்கூட இல்லையா.........

ஜூலை:

கவலைப்படுவானேன். இப்போது இருக்கிற வேலை மும்முரத்தில் இதைப்பற்றி யோசிக்கக்கூட நேரமில்லையே. நீங்கள்தான், எங்கள் கழகத் தோழர் அன்பழகன் சொன்னதுபோல, தேனில் மருந்து குழைத்து நாவில் தடவும்போது, ஜுர ஜன்னிக்காரன், விரலைக் கடித்த கதைபோல, நாட்டுக்கு வந்துள்ள ஆபத்தைப் போக்க, உங்களோடு ஒன்றுபட்டு இருக்கும் எம்மைத் தடைசட்டம் கொண்டு தாக்க திட்டமிட்டுவிட்டீர்கள்.

ஆகஸ்ட்:

அவசரமான வேலை, உள்ளபடி......பிறகு பேசிக் கொள்வோமே......

★

## எல்லாம் நன்மைக்கே!

முன்பெல்லாம் நகை செய்பவர்கள், தாங்கள் செய்யும் நகைகளில் ஏதாவது கலப்படம் ஏற்பட்டு விடுமோ என்ற அச்சத்தின் காரணமாகப் பொற்கொல்லர் பெருமக்களைத் தங்கள் வீட்டில் வைத்துத் தங்கள் மேற்பார்வையிலேயே நகைகளைச் செய்து கொள்வார்கள் -- அவ்வளவு நம்பிக்கைக் குறைவு பொன் தொழிலாளர்களிடம்.

ஆனால், இப்போது அந்த அச்சம் துளியும் ஏற்படத் தேவையில்லை. ஏனென்றால், இப்பொழுது செய்யப்படும் நகைகள் எல்லாம் தனித் தங்கமாக இருத்தல் ஆகாது என்பது அரசாங்கத்தின் உத்தரவாகும்.

எனவே, இனிமேல் நகை செய்வோரும் செய்விப்போரும் அச்சமின்றி, ஐயமின்றி இருக்கலாம்.

பொன் தொழிலாளி அச்சத்தோடு நகை செய்ய வேண்டியதில்லை. நகை செய்விப்பவர்கள் ஐயப்பாட்டோடு நகை செய்விக்க வேண்டியதில்லை.

முன்பு, நகைகளில் கலப்படம் செய்தால் குற்றம்.

இப்போது, நகைகளில் கலப்படம் செய்தால் பாராட்டு.

எனவே, அரசாங்கத்தின் தங்கக் கட்டுப்பாடு உத்தரவு இரு சாராருக்கும் நன்மை பயப்பதாகவே அமைந்துவிட்டது.

# என் காதல் கானல் நீர்தானா?

—ச. கனகராசன்—

காவிரி பாயும் நாட்டிற்குச் சொந்தக்காரன்---சோற்றுக்குப் பஞ்சம் இல்லை என்று போற்றிப் புகழும் நாட்டையாளும் சோழன், தன் தலைநகரமாம் உறையூர் பெரு நகரின் வீதி வழியே உலா வந்தான்.

சோழன் வரவை எதிர்நோக்கிப் பெருவீதியின் இருமருங்கிலுமுள்ள மாடமாளிகையின் மேல் தளத்தில் முதியோரும் இளையோரும், காளையரும் கன்னியரும் காத்திருந்தனர். சோழன் அலங்கரிக்கப்பட்ட இரதத்தில் அமர்ந்து வந்தான். பூ மழை பொழிந்தனர் மக்கள். பூவையர் உள்ளத்தைக் கவர்ந்தான்.

ஓர் மூதாட்டி இளவரசனைக் காட்டினாள் தன் சின்னஞ் சிறிய மகளுக்கு.

"அது யாரம்மா?"

"நம்ப இராசாவைத் தெரியுமா இராசாவை . . . . . இவர்தான் நம்ப இராசா."

"நம்ப இராசாவாம்மா . . . இவரு ரொம்ப அழகாயிருக்காரம்மா!"

"ரொம்ப அழகாயிருக்காரா . . . . அவரைத்தான் உனக்குக் கல்யாணம் பண்ணணும்."

"என்னம்மா அது. . . . இராசாவாவது என்னைக் கட்டிக்கவாவது . . . . நடக்காததைச் சொல்றியே"

"இல்லையடி உன்னைத்தான் . . . நீ பெரியவளானதும் உனக்கு அவரைக் கட்டிக்குடுக்கணும்"

"என்னம்மா . . . . . அதெல்லாம் இப்ப?" என்று சொல்லிவிட்டுத் தோட்டத்தின் பக்கம் சென்றாள். தன்னைப் போன்ற தன் தோழிகள் அங்கே விளையாடிக் கொண்டிருந்தனர்.

"எழிலி எனக்குக் கல்யாணம் தெரியுமா?"

"என்ன . . . கல்யாணமா? இந்த வயசிலா?"

"இப்ப இல்லையடி நான் பெரியவளானதும்"

"உனக்கும் யாருக்கும்?"

"எனக்கும் நம்ப இராசாவுக்கும்டி"

"உனக்கும்இராசாவுக்கும் நடக்கக் கூடியதா?"

"நடக்காமலா? உண்மையாக நடக்கப் போவுதுடி எனக்கும் இராசாவுக்கும்"

"அப்போ எனக்கும் மகிழ்ச்சிதான். ஆனால்,இராசாவைக்கட்டினவுடனே என்னை மறந்திட மாட்டியே!"

"என்னடி! அப்படி நினைச்சிட்டே! உன்னை விட்டுட்டா நான் போயிடுவேன். எனக்குத் தோழி நீதானடி!"

சில ஆண்டுகள் கழிந்தபின் . . .

சிறிய வளாயிருந்த அவள் பெரியவளானாள். பருவம் அவளை எழில் பார்வையாக்கியது. எல்லா அழகும் அறிவும் அமையப் பெற்றவளானாள். அன்னை சின்ன வயதில் நினைவூட்டிய சோழனைக் காணத் துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தாள்.

ஊரெல்லாம் விழாக்கோலம்!தெருவெல்லாம் மாக்கோலம்! மங்கையர் உள்ளமெல்லாம் மகிழ்ச்சிக் கோலம்! ---ஏன்: உறையூர் கோமான் சோழன் உலா வருகிறானாம்.

திரண்டதோளினனாய்! திருவும்எழிலும் அறிவும் ஆண்மையும் அமையப் பெற்றவனாய் எல்லா நலனும் ஏற்ற குணமுமுடைய இளங்காளையாய் அலங்கரிக்கப்பட்ட தேரில் சோழன் உலாவந்தான் --- சோழனைக் காண உறையூரின் வீதியின் கண் உள்ள வீட்டின் பெண்கள் சோழன் தேரை எட்டி எட்டிப் பார்த்தனர். சோழன் அவள் வீட்டு முன்பும் வந்தான். சோழனை எல்லாப் பெண்களைப் போலவே அவளும் பார்த்தாள். ஆனால் அவள் பார்த்த விதம் சோழனை மணக்கப் போகிறோம் என்ற நோக்கமுடன், அவனது அழகு அவளை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அப்படியே பார்த்தவண்ணமிருந்தாள். சோழன் தேர் அவள் வீட்டையும் கடந்து அவள் தெருவையும் கடந்து செல்லும் வரை பார்த்தாள். அதனைக் கண்டாள் அவள் அன்னை.

சோழனைக் கண்டுவிட்டாளே தன் மகள். அவன் அழகால் மயங்கி அவனையே நினைத்து நினைத்து உருகிப் போய்விடப் போகிறாளே என்றஞ்சி, அவளை வீட்டினுள்ளே தள்ளிக் கதவைப் பூட்டிவிட்டாள். வெளியே யாரையும் பார்க்காவண்ணம் சிறை வைத்துவிட்டாள். சோழனைப்பற்றி எண்ணி எண்ணி ஏங்கினாள். தன் சிறு வயதில் சோழனுக்கும் உனக்கும் மணம் என்று சொல்லிவிட்டு இப்போது பார்க்கக் கூடாது என்று சிறை வைத்துவிட்டாளே என்றெண்ணி வருந்தினாள். ஆனால் சோழனை மறுபடியும் பார்க்க முடியவில்லை. சோழனின் நினைவால் துரும்பானாள். அன்னையைக் கெஞ்சினாள். அழுதாள். ஆறாத் துயருற்றாள். தோழியைக் கெஞ்சியும் ஒன்றும் நடைபெறவில்லை.

தோழி வந்தாள். தலைவி வருத்தத்துடன் இருப்பதைப் பார்த்துக் கேட்டாள்.

"ஏன் தலைவி இப்படி ஒரே சோகமாய் இருக்கிறீர்கள்".

"என்ன செய்வது? என் நிலை அப்படி"

"உங்கள் நிலை என்ன அப்படி? என்னிடம் சொல்லுங்களேன். எதுவானாலும் தீர்த்துவிடுகிறேன்."

"உன்னிடம் சொல்லி என்ன நடக்கப் போகிறது"

"தலைவி! இதுவரை நீங்கள் சொல்லி எதை நான் செய்யவில்லை"

"செய்திருக்கிறாய்! இல்லையெனச் சொல்லவில்லை. ஆனால், நான் சோழன்மேல் தீராக் காதல் கொண்டுள்ளேன்.


"கிடைக்காததை நினைத்து ஏங்கலாமா?"

"கிடைக்கும் என்று சொன்னாளே அன்னை?"

"என்ன சொன்னாள் அன்னை?"

"சில ஆண்டுகளுக்குமுன் சிறியவளாயிருந்தபோது ஆசை காட்டினாளே அன்னை, 'இராசாவுக்கும் உனக்கும் கல்யாணம்' என்று.அதனை நம்பிவிட்டேனடி. நீர்வேட்கை கொண்ட மிருகங்கள் கானல் நீரை நீர் என எண்ணி ஏமாந்துவிடுவது போல நான் அன்னையின் வார்த்தையால் ஏமாந்தேன்"--என்று வருத்தத்துடன் கூறும் கருத்தழகும் சொல்லழகும் அமைந்த முத்தொள்ளாயிரப் பாடல் இதோ;-

"குதலைப் பருவத்தே கோழிக்
கோமானை
வதுவை பெறுகென்றாள் அன்னை
—அதுபோய்
விளைந்த வா இன்று விபன்
கானல் வெண்தேர்த்
துளங்கு நீர் மாமருட்டி அற்று,"



# எது வாழ்க்கை?

நண்பர் செல்வத்தைச் சந்தித்து நீண்ட நாட்களாகிவிட்டது. எனக்கும், அன்று அலுவலக விடுமுறை. அலுவலக நாட்களில், ஓய்வு வராதா? என்ற ஏக்கம்! ஓய்வு நாட்களில் அலுவலகம் இல்லையே என்ற ஏக்கம்! மனமே இப்படித்தான்! கிடைப்பதைக் கொண்டு அமைதி அடைவதில்லை! கிடைக்காதா? என்ற ஏக்கம்! கிடைத்தால் இவ்வளவுதானா என்ற அதிருப்தி! அதனால், ஏதோ தேவைக்கு, மனம் அமைதியில்லாமல் அலைவது! அந்த மனநிலையுடன்தான். செல்வத்தைச் சந்திக்கச் சென்றேன்.

செல்வம், ஒரு எழுத்தாளர். பத்திரிகை உலகம் அறிந்த ஒரு சிறந்த சிந்தனையாளர்! நடுநிலைமையின் சங்கமம் தனக்குப் பிடித்தால் நல்லது! இல்லையெனில் நல்லதையும், கெட்டதாக உலகுக்கு எடுத்துக்காட்டி, சாதித்து, அதில் பெரிய மனிதர்களாகும் இந்நாளில், அறிந்த உண்மையை, அனுபவத்தில் கண்ட நன்மையை உலகுக்கு அஞ்சாமல் எடுத்துக் காட்டும் இலட்சியவாதி! இதில் ஒரு அதிசயம், எவராலும் மதிக்கப்பட்டார் அவர்!

எதற்கும், ஒரு கூட்டம் சேர்த்துக் கொண்டு, அதற்காக மாற்றுரை ஏசி, தான் பெரிய மனிதராக மாற முயலும், வாழ்க்கையை வியாபாரமாக ஆக்கிக் கொள்ளும் சிறுமனம் படைத்த பலர் வாழும் இந்நாளில், இவரைப்போல், உண்மையைத் துணிந்து கூறுபவர்கள், உலகில் மதிக்கப்படுவது அதிசயம்தானே!

நான், அவர் அறைக்குப் போனபோது. ஆழ்ந்த சிந்தனையோடு, சாளரத்தை நோக்கியவண்ணம் இருந்தார். அருகிருந்த மேசைமேல், எழுதும் தாள் காற்றில் படபடக்க, எழுதுகோல், திறந்தபடி வைத்திருக்க, நெற்றியில் ஏதோ பொருளறியா கருத்துச் சுருக்கங்கள் மடிந்திருக்க, இன்னமும் சாளரத்தின் வழியே கண்பார்வை நிலைத்திருந்தது.

'செல்வம்!' என்றேன். 'ஆ! நீயா, வா முரளி! என்ன, நீண்ட நாட்களாகவே காணவில்லை!' என்றார். ஆனால், அந்தக் கேள்விக்குறியான பார்வை, இன்னமும் சாளரத்தின் ஊடே ஏதோ ஒரு விளக்கத்திற்கு அலைந்து கொண்டிருந்தது!

'என்ன? ஒரே ஆராய்ச்சியில் இறங்கியிருக்கிறீர்கள்! கோடையின் வெப்ப அளவை கணிகிறீர்களா?' — என்றேன் சிரித்துக்கொண்டே!

'அதற்குப் பல ஆராய்ச்சி நிலையங்கள் இருக்கின்றன. ஆனால், நம்

**குழலோன்**

போன்றவர்கள், தவறு, என்னைப் போன்ற எழுத்தாளர்கள், மனிதன், அதாவது மனிதனாக வாழ விழைந்து, வாழமுடியாமல், இருக்கும் மனித மனத்தின் தட்ப வெப்ப நிலைகளை ஆராயவேண்டும் தேவையான 'அறிவுரை' என்ற மருந்தை வகை செய்யத் தேவையான வழிகளை உலகுக்கு அளிக்கவேண்டும்! — ம்...! — நீண்ட பெருமூச்சுக் கலந்த ஏளனப் புன்னகையை — வேதனையின் விளைவால் ஏற்பட்ட புன்னகையாகவும் இருக்கலாம்—உதிர்த்தார் — நான் தொடர்ந்தேன்.

'ஏன் பெருமூச்சு விடுகிறீர்கள்? அங்கு எந்த வாழ வகையறியா மனதைக் கண்டு வேதனைப்படுகிறீர்கள்?—என்றேன்.

'அதோ பார்!' என்றவாறு, சாளரத்தின் அருகே ஒதுங்கி, எனக்கு வழி விட்டார். அங்கே......

எதிரில் ஒரு குட்டிச் சுவர்...அதில் சாய்ந்தவாறு, ஒரு கிழவன்—நரைத்து, தூசு படர்ந்து நிறம் மாறிய தாடி, மீசையுடன் துரிதவண்டியின் கண்ணாடி, கல்பட்டால் கீறல் பல நூறு விழுவதுபோல் சுருங்கிய முகத்துடன், சின்னஞ்சிறிய, ஒளியிழந்த கண்கள், மணலில் புதைந்த கிளிஞ்சலாகக் காட்சியளிக்க, அரை முழத்துண்டை அரையில் அணிந்து அலங்கோலமாக உட்கார்ந்திருந்தான்.

'என்னப்பா! ஏதோ பைத்தியம் போல் தோன்றுகிற. அவன் வாழ்க்கையைப்பற்றி என்ன தெரியும் என்று, நீ வேதனைப்படுகிறாய்?'—என்றேன்.

'ஆம், நேற்று மாலை வரை எனக்கு அந்தக் கிழவரைப்பற்றி ஒன்றும் தெரியாமல் இருந்தது. நானும், ஏதும் கவலைப்படாமல் இருந்தேன். ஆனால், இன்று, என் இதயம் வேதனைக் கண்ணீர் வடிக்கிறது! ஏன்? மனிதனின் இதயத்தில் எழும் சாதாரண, இயற்கையான ஆசைக்கு ஆட்பட்டு, இருந்த நிம்மதியையும் இழந்து, பைத்தியமாகித் திரியும் அந்தப் பரிதாபத்திற்குரியவரின் நிலை என்ன, இன்பதுன்ப உணர்ச்சிகளுக்கு மதிப்பளித்து வாழும், பாழும் மனித மனம் உடைய என்னால், எப்படி, யாராவது, எப்படியாவது இருக்கட்டும்! நம் தொழிலைச்செய்வோம் என்று இருக்க முடியுமா?

'அவரவர்கள் கடமையைச் சரிவர, பொறுப்புணர்ந்து செய்தால், எந்தத்

தொல்லையுமில்லை என்று நீதானே கூறியிருக்கிறாய்! திடீரென்று இப்படிப் பேசுகிறாயே!'

'ஆம்! நான் சொன்னேன். ஆனால் உலகில் எதற்கும், 'விலக்கு' இருக்கிறது. நீ உன் கடமையைச் செய்யாமல் மாற்றாரைக் குறை கூறுவது தவறுதான் ஆனால், அந்தக் கிழவர், மனிதனின் கடமை, வாழ்க்கையின் பொருள் இன்னதென்று அறிந்து, அதன்படி நடக்க முயன்றார்! ஆனால், உலகம், ஏமாளி அவர் என்று, இல்லாதவைகளெல்லாம் கூறிப், பைத்தியதியமாக்கிவிட்டது. இல்லை! அவர் பைத்தியமில்லை. பார்வையால் எடைபோடும் உன் போன்றவர்கள் பைத்தியம் என்று கூறுகிறார், உருவத்தைப் பார்த்து அவரை! ஆனால் அவர் இன்னமும் சுய சிந்தனையோடு, தத்துவ அறிவோடுதான் வாழுகிறார் — நான் ஆவலுடன் கேட்க ஆரம்பித்தேன். அவர் தொடர்ந்தார்.

'முரளி! நீ காதலுக்கு வயதுக் கட்டுப்பாடு இருப்பதாக எண்ணுகிறாயா?

நான் அமைதியாக இருந்தேன்.

'சொல்! உன் மனதில் பட்டதைக் கூறு! அப்போதுதான் உண்மைக்கு உருவம் கிடைக்கும்!'

சிந்தனையில்லாத கவிதை, எப்படிப் பொருளில்லாது காண்கிறதோ, அதே போல் வாதமில்லாத, எதிர்ப்பில்லாத கொள்கையின் உட்பொருளை உலகம் காணாமல் போகிறது. சொல்கிறவனும் பைத்தியக்காரனாகிறான். கேட்கிறவனும் முட்டாளாகிறான்.

என்னத்தைச்சொல்ல! பருவத்தில் தான் பயிர் செழிக்கிறது. இளமையில்தான், காதலின்பத்தின் சுவை, பொருள் தெரிகிறது.'

'ஆம்! நீ கூறுவது, பல நூற்றுண்டுகளுக்கு முன் பொருளுடன்; சுவையுடன் இருந்தது. ஆனால், இன்று, விளையாட்டாக, பொழுது போக்காக மாறிவிட்டது. அதனால், அதை உடையவனுக்கும், உடையவனுக்கு உடமையாக்கப்படும் பொருளுக்கும், உடமைக்கு, உரிமை கொண்டாடும் பலருக்கும், வேதனையும், துன்பமுமே மிஞ்சுகிறது. இன்று, காதல் என்பது, வானவில்லின் வண்ணச் சிதறல்களுக்கு ஒப்பிடலாம். அதை நிரந்தரமாக எண்ணி, ஏமாற்ற மடைகிறார்கள்.'

'நீங்கள் சொல்லும் கூற்றை ஒத்துக்கொள்ள முடியவில்லை! வானவில்லின் வண்ண அழகுக்கு மனம் மயங்குகிறது. ஆனால், அது விரைவில் மறைகிறது உண்மை. அதற்காக, மறையும் அந்தப் பொருளுக்காக, மனம் விழையாமல், இரசிக்காமல் இருக்க முடியுமா? அதை இரசிக்கவேண்டும், அது ஏமாற்றி மறைத்தாலும், அந்த எண்ணத்திலேயே, இதயத்தில் கலந்துவிட்ட அந்த சிலநோ இன்ப நினைவுகளிலேயே மனம் அமைதியடைந்தால், வாழ்க்கையில் தோல்வி ஏது? அதைவிட்டு, மறையும் வானவில்லை, ஏறெடுத்துப் பார்க்கக் கூடாது என்று கண்பொத்திக்கொள்ளுவது, மடமையல்லவா? என்றேன்.

'ஆம்! நீ கூறுவதும் உண்மைதான். மடமைதான். ஆனால், இன்றைய சூழ்நிலை, மனவளம் அவ்வாறு இல்லையே! அழகுணர்ச்சி மதிப்பளிக்க வேண்டும்! ஆனால் அடிமையாகிவிடுகிறார்கள். கானல் நீரைத் தேடி ஓடுவதுபோல், கலை, அழகு என்று கூறி உலகையும், ஏமாற்றி, தானும் படுகுழியில் விழுந்து மாய்கிறார்கள். அத்துடனா? தன்னைச் சார்ந்தவர்களையும் இழுத்துச் சென்று, அந்தப் படுகுழியில் தள்ளி வேதனைப்படுத்துகிறார்கள்.

ஆமாம்! ஏதோ எதிரில் இருக்கும் கிழவரைப்பற்றிக் கேட்டுவிட்டு, எங்கோ சென்றுகொண்டிருக்கிறாயே?' — என்றேன். 'இல்லை— நான் கேட்ட கேள்வி, அந்தக் கிழவரின் வாழ்க்கைக்கு முன்னுரை! தன் முடியப்போகும் வாழ்க்கையின் முதல் அத்தியாயத்திலிருந்துகூறினார்அவர்– நேற்று இரவு. அதன் விளக்கம் சொல்லுகிறேன் கேள்! அவர் வாழ்க்கையைப்போல் நிறையக் கேள்விப்பட்டிருப்போம், ஏன்? கண்ணாலும் கண்டிருப்போம். ஆனால் நமக்கெதற்கு இதெல்லாம் என்ற அலட்சியப் போக்கு, நம்மை அதன் உண்மையை உணரமுடியாததொலைவிற்குஇழுத்துச் செல்லுகிறது. அதனால் வாழ்க்கை மனம் என்ற உயிருள்ள பொருள் மணக்காமல், இயந்திர வாழ்க்கையாகிவிடுகிறது. மனம் மரத்து விடுகிறது. உண்மையும் ஒளிந்து அழிந்து மறைகிறது. போலித்தனமும், வரட்டுக் கௌரவமும் அநாகரிகமும் இன்றையச் சமுதாய சூழலில் சர்வாதிகாரம் நடத்துகிறது. என்று மனிதன் தன் உள் மனதிற்கு மதிப்பளித்து அதற்கு உண்மையான தொண்டனாகிறானோ, என்று நல்லதையும் கெட்டதையும் எண்ணத் தராசில் சோம்பலில்லாமல் எடைபோட்டுப் பகுத்தறிகிறானோ, அன்றுதான், அவன் உண்மையான மனிதனாக, மாறுவான்:

அந்தக் கிழவன், சிறுவயது முதலே, வாழ்க்கையில் ஒரு பிடிப்புமின்றி இருந்தான். எதிலும் இயற்கையாக எழும் ஆவலோ, ஆசையோ அவனுக்கு ஏற்பட்டதில்லை. படிக்கும் வரை, புத்தகம் தவிர வேறு ஒன்றும் அவனுக்குத் தெரியாது. பிறகு

## இராசேந்திரபிரசாத்

*இத்துணைக்கண்டத்தின் முதற் குடியரசுத் தலைவராக இருந்து பெருமையும் புகழும் பெற்ற டாக்டர் இராசேந்திர பிரசாத் அவர்கள், திடீரென்று இயற்கை எய்திவிட்டார் என்ற செய்தி கேட்டுப் பெரும் அதிர்ச்சி அடைந்தோம்.*

*அவரது மறைவு நாட்டுக்கு ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும்.*

*அவரது தூய்மையான உள்ளமும், எளிமையான வாழ்க்கையும், அமைதியின் உறைவிடமும் மனிதப் பண்பாட்டுக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்கிற்று.*

*அவரது பிரிவால் துயரப்படும் இத்துணைக்கண்டத்து மக்களோடு நாமும் சேர்ந்து நமது துன்பத்தை வெளிப்படுத்துவதே நாம் அவருக்குச் செய்யும் மரியாதையாகும்.*

பதிவு எண். எம். 4642 தொலைபேசி எண்.... அலுவலகம் 15 இல்லம் ...118
இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

வேலைக்குச் செல்ல விரும்பவில்லை. அப்பாவின் வருவாயில் வயிற்றை நிரப்பிக்கொண்டு, யோகப்பியாசங்களிலும், புராணங்களிலும் மனதைத் தோயவிட்டிருந்தான் வாழ்க்கையே அவ்வளவுதான் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை! வீணாகக் கழிந்தது முப்பது ஆண்டுகள்.

அவன் வீட்டில், ஒரு தாழ்ந்த சாதிப் பெண் வேலை செய்து வந்தாள்— அதுதான் ஆதித் திராவிடர் என்பார்களே — அவர்களின் குலம் என்று வைத்துக்கொள்ளேன். ஒரு நாள், இராமாயணத்தில், அண்ணலும், சீதையும் நோக்கிக் கொண்டதை படித்தபடி நிமிர்ந்தவர், அந்த ஆரணங்கு வீட்டைக் கூட்டாமல், தன்னைக் கண்ணால் கூட்டிக் கழித்துக் கொண்டிருந்ததைக் கண்டார். இவரின் பார்வை பட்டதும், கருநிற அழகியாம் அவளின் கன்னங்களில் ஒரு விவரிக்க முடியாத ஒரு மலர்ச்சி, கண்கள் தரை நோக்க, கொடி உடல் அதிர நின்றாள். இவருக்கோ. ஒரு புதிய புலனுணர்வால் இதயத்தின் வேகம் அதிகரிக்க, எண்ணத்தின் சுழற்சியில் சிக்கித் தவித்தார். இராமாயணத்து இன்ப வரிகளெல்லாம், திரைப்படம் போல் கண்முன் தோன்றித் தோன்றி மறைந்தன. வாழ்க்கையில், ஏதோ ஒரு புதிய இன்பம், தூரத்திலிருந்து கண் சிமிட்டுவதுபோல் ஒரு கனவு மயக்கம்!

மயக்கம் தெளிந்தது. கனவு நினைவாகியது. அவரும், அவளும், உலகின் கண்களுக்கு, அதாவது, அவர் உலகமாக நினைத்த. பெற்றோர்களின் கண்களுக்கு அப்பால் துரத்தப்பட்டார்கள். வாழ வகை தெரியாத அவர், துன்பத்தின் முதல் மைல் கல்லில், உழைத்து உரமேறிய, ஆனால் மென்மையான ஒரு பெண்ணின் கையைத் துணையாகப் பற்றி இவ்வூருக்கு வந்தார்.

ஆண்மை கொஞ்சும் அந்த நல்லவன், அந்த நல்லிதயத்தாள் ஒன்றியிருந்ததைக் காணக் கூசிய உலகத்தின் கண்கள் அவர்களை, அந்தக் குட்டிச் சுவரண்டை ஒதுக்கியது.

உழைத்து உழைத்துப் பழக்கப்பட்ட அவள், அந்த நல்லவரை உட்கார வைத்துச் சோறு போட்டாள்-பல வீடுகளில் வேலை செய்து. யோகாப்பியாசம் செய்த உடல் தளர்ந்தது. உழைத்த அவளும், தன்னுயிருடன், இன்னுயிரொன்றைச்சுமந்தவண்ணம் அந்தக் குட்டிச் சுவரண்டை உள்ள நிழலில் படுத்துவிட்டாள். இராமாயணம் படிக்கப் பழகிய அவர், இன்னுமொருஉயிரைக்காப்பாற்ற வகையறியாதவராயிற்றே! காலம், பல மேடு பள்ளங்களில்நடந்து, அந்தப் பலவீனமானவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

ஒரு நாள் இரவு, ஒரு இனிய குரல், ஆனால் அவலக் குரலுடன் இந்த உலகின் செயற்கை ஒளியில் சிங்காரம் செய்து கொள்ளுவதை விரும்பாமல், மூடிய கண்ணுடன் தோன்றியது. உருக்குலைந்த அவள், குழந்தையைக் காண மனம் இல்லாதவளாய், எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் சுதந்திரமாக உயிரைவிட்டாள். சென்றவளை நினைத்து அழுவதா? வந்தவனைக் கண்டு சிரிப்பதா? என்று புரியாமல் திகைத்து அந்தக் கிழவரின் மனம் அமைதி அடைந்தது. கண் திறக்காமல், குரலும் அடங்க, அந்தச் சிறு அரும்பு கருகியது, தன்னை வாழ வைக்க இந்த உலகத்தால் முடியாது என்று தெரிந்து!

அன்றுமுதல், ஏதோ கிடைத்ததை உண்டு, வாழ்க்கை சோலையா? பாலையா? என்ற புதிருக்கு விடை தேடி உட்கார்ந்திருக்கும் அந்தக் கிழவர் அடிக்கடி முணுமுணுப்பது இது தான்.

'சென்றதை நினைத்து அழுவதா?
வருவதை நினைத்துச் சிரிப்பதா?
இருப்பதைக் கண்டு திகைப்பதா?
உலகில் எதற்கு வாழ்வது?'

ஆம்! எல்லாருடைய வாழ்க்கையும் கேள்விக்குறியாகி விட்டது. விடை காண விழைந்தவர்களெல்லாம், எங்கே என்று தேடுவதே பிரச்சினையாகிவிட்டபோது, விடை எங்கே கிடைக்கப் போகிறது?

எனக்கும் ஒன்றும் புரியவில்லை, விளக்கம் சொல்ல விழைகிறது மனம், ஆனால் முழுதாகவில்லையே எண்ணம், விடை பெற்றுக் கிளம்பிவிட்டேன்! வேறு என்ன செய்ய! அவனை அவனே உணர்ந்தால்தானே வாழ்க்கை என்று பொருள்!

★

**விற்பனையாளர்கட்கு:**

அதிக இதழ் தேவைப்படுவோர் புதன் கிழமைக்குள் தெரியப்படுத்தவும்.

**சந்தாதாரர்கட்கு:**

சந்தா முடிந்தவுடன் சந்தாவைப் புதுப்பிக்கும் சந்தாதாரர்கள் சந்தா எண்ணைத் தவறாமல் குறிப்பிடும்படி கேட்டுக் கொள்கிறோம்.

நிர்வாகி.

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.